செலுத்தியாகிவிட்டது. உங்கள் வழிகாட்டுதலின்படி அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு எல்லா தகுதியும் இருக்கிறது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரம் உயர்த்தித் தருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா தகுதிகளையும் அந்தப் பள்ளி அங்கே பெற்று நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருக்கிறது என்று இங்கே தெரிவித்திருக்கிறார். எனவே, அரசு வரக்கூடிய காலங்களில் நிச்சயமாக அதற்கு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

148—

விளையாட்டரங்கம்

***5371—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனியில் அமைந்துள்ள மாவட்ட விளையாட்டரங்கத்தை பயன்பாட்டுக்குக் கொண்டு வரவும், விளையாட்டரங்கத்தில் நீச்சல் குளம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அவைக்கு அளிக்கிறேன்.

தேனி மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில், 15 ஏக்கர் நிலப் பரப்பில், ஒரு மாவட்ட விளையாட்டு வளாகம் வடிவமைக்கப்பட்டு, அதில் சிறகுப் பந்து உள் விளையாட்டு ஆடுகளம், உடற்பயிற்சிக் கூடம், மேசைப் பந்து, ஸ்குவாஷ், டென்னிஸ், குத்துச் சண்டை மேடை ஆகிய விளையாட்டு வசதிகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 400 மீட்டர் ஓடுகளப்

2008 ஏப்ரல் 23]

பாதை பணி மட்டும் இன்னும் நிறைவு பெறாமல் இருக்கிறது. அதையும் சீக்கிரமாக முடித்துக் கொடுக்க இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். மேலும், தேனி மாவட்டத்தினுடைய விளையாட்டு வளாகத்திற்குள்ளேயே, 25 x 13 மீட்டர் அளவிலான ஒரு நீச்சல் குளம், திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில், ரூபாய் 65.50 இலட்சத்தில் அமைத்திடும் பணி நடைபெற்று வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில், மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 2004-2005-ல் அனுமதி வழங்கப்பட்டு, அரசின் சார்பில் 34 இலட்சம் ரூபாயும், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர், அன்புச் சகோதரர் திரு. டி.டி.வி. தினகரன் அவர்கள் நிதியில் 35 இலட்சம் ரூபாயும், நமது சட்டமன்றக் கட்சித் துணைத் தலைவர், அண்ணன் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் நிதியிலிருந்து ரூபாய் 5 இலட்சமும், என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் 10 இலட்சமும் ஒதுக்கி, அடிப்படைக் கட்டமைப்புப் பணிகளெல்லாம் நிறைவடைந்த நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் 400 மீட்டர் ஓடுகளம் அமைக்கப்படாத காரணத்தினாலும், அதேபோல, கால்பந்தாட்ட மைதானம், வலைப்பந்து மைதானம் போன்றவை அமைக்காத காரணத்தினாலும், மைதானம் விளையாட்டிற்குப் பயன்படாமல் இருக்கிறது. அங்கிருக்கின்ற அலுவலர்களை அணுகிக் கேட்கின்றபோது, இவற்றை நிறைவேற்றுவதற்கு அரசுக்குப் பதினேழரை இலட்சம் ரூபாய்க்கு அனுமதி கோரி கருத்துரு அனுப்பியிருக்கிறோம், அனுமதி பெற்றவுடன் அந்தப் பணி செய்து தரப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அரசுக்கு, தேனி மாவட்ட ஆட்சியரால் பதினேழரை இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தினை விளையாட்டுத் துறைமூலம் ஒதுக்கி, தேனி மாவட்ட விளையாட்டு அரங்கத்தினை பயன்பாட்டிற்குச் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 23

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னதுபோல, அவர்களுடைய ஆட்சியில் 2003-2004-ல் Part-II திட்டத்திலே அனுமதிக்கப்பட்டது. ஆனால், துவக்கப்பட்ட அந்தத் திட்டத்தின் துவக்க விழா 16-6-2005-ல் நடத்தப்பெற்றது. ஆனால் அதற்குப் பின்னால்தான், இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னால் அவர் ஏற்கெனவே சொன்னதுபோல, அந்த நிதி போக, நம்முடைய விளையாட்டு ஆணையம் மூலம், மாநில அரசு பங்கை அடிப்படையாகக் கொண்டு, 30.30 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல 4-1-2008-ல் நீச்சல் குளம் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. அதற்காகவும் அரசு 27 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. அவர்கள் சொன்னதைப்போல முடியாத பணிகளைச் சீக்கிரமாக முடிப்பதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்குத் தடகளப் பயிற்றுநர்கள் நியமிக்க வேண்டியுள்ளது. தேனி நகரிலிருந்து மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், 3 கி.மீ. தூரம் செல்ல வேண்டியுள்ளது. காலை நேரங்களிலும், மாலை நேரங்களிலும் அந்த விளையாட்டு அரங்கத்திற்கு ஒரு சிறப்பு நகரப் பேருந்து இயக்குவதற்கும் தேனியில் விளையாட்டு வீரர்களுக்கென அந்த விளையாட்டு அரங்கத்தில் தங்கும் விடுதி அமைப்பதற்கும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்ட வளாகத்திற்கு மாவட்ட விளையாட்டு அலுவலர் ஒருவரும், கால்பந்து பயிற்றுநர் ஒருவரும், கைப்பந்து பயிற்றுநர், கையுந்துப்பந்து பயிற்றுநர், கூடைப்பந்து பயிற்றுநர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். போக்குவரத்து

2008 ஏப்ரல் 23]

வசதியைப் பொறுத்தவரையில், அந்தத் துறை அமைச்சரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

149—

இருவழிச் சாலை

***31944—திரு. கே.எஸ். விஜயகுமார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி வட்டம், கவரப்பேட்டை-சத்தியவேடு சாலையை இருவழிச் சாலையாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கவரப்பேட்டை-சத்தியவேடு சாலை ஒரு மாநில நெடுஞ்சாலையாகும். அந்தச் சாலை சென்னையிலிருந்து கல்கத்தா செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலை எண் 5-ல் கவரப்பேட்டை என்கிற இடத்தில் பிரிந்து சுமார் 22 கி.மீ. தூரத்திற்கு மாநில நெடுஞ்சாலையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. அந்தச் சாலை துவக்கத்திலிருந்து 6 கி.மீ. வரை இருவழிச் சாலையாகவும் மற்றும் 19-லிருந்து 20-வது கி.மீ. வரை ஒரு கி.மீ. சாலை, மொத்தம் 7 கி.மீ. சாலை ஏற்கெனவே இருவழிச் சாலையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, 2006-2007 ஆம் நிதியாண்டிலும், 2007-2008 ஆம் நிதியாண்டிலும் மீதமிருக்கக்கூடிய பகுதிகளை இருவழிச் சாலையாக மாற்றுவதற்குத் திட்டம் எடுக்கப்பட்டு, திட்டப் பணிகள் வரக்கூடிய ஜூன் மாத இறுதியில் நிறைவடையவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார்.